66

# சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்

வந்தே மாதரம்

## சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்

### பாரததேவி வாழ்த்து

#### வெண்பா

சொல்வாய்ந்த *பாரதத்தைத் தோளில் அறங்காக்க
வில்லாய்ந்த என்றன் *விறல்நாட்டைக்—கல்லாய்ந்த
விண்ணிலுயர் நல்லிமய வெற்பானை நெஞ்சமே!
மண்ணிலுயர் தாளென்று வாழ்த்து,

* பாரதம் - பாரததேசம்.

* விறல்நாடு-வலிமைமிகுந்த தேசம்.

### சக்தி பாட்டு

இராகம்-சஹானா; தாளம் ஆதி

"அப்பா பழநிமலை" என்ற மெட்டோடு ஒருவாறு ஒத்தது.

பாரத நாட்டுக்குத் தாயடி நீ!—உன்
பாரதத்தை நம்பிய *சேயடி யான்!
பாரத நாட்டுக்கு வந்த கதி—தனைப்
பார்த்திருந்தும் அதைத் தீர்த்த தில்லை அடி! (பா)

* சேய்-குமாரன்

வீரர்தம் நாட்டுக் குலதெய்வ மே —எம்
வெற்றிப் புயத்தினில் வாழ்பவளே!
சாரஎம் வாழ்வில் சனிபுகுந்தான்—இங்குச்
சக்திக்குத் தொண்டர் தலைகுனிந்தோம் அடி! (பா)

இட்ட தலைவிதி தீர்வதில்லை—என்ற
ஈனக் கருத்திலும் உண்மை யுண்டோ?
துட்ட விதிகளிற் கோடியினர்—தனைச்
சூரைப் படுத்திய சுந்தரியே! அடி! (பா)

வட்ட நிலாநின் முகத்தொளியில்—எம்
வாழ்க்கையின் வெற்றி மலர்வ தடீ!
தொட்டவை ஓங்க வசப்படுவாய்—எம்
* தொழும்பு போக்கிடு! சுந்தரியே! அடி! (பா)

* தொழும்பு-அடிமை வேலை

## காளையர் எழுச்சி

"சென்று கனிபறித்துக் கொண்டு" என்ற மெட்டு.

மன்னும் இமயமலை வடக்காம்—புகழ்
வாய்ந் திருக்கும் *குமரி தெற்காம்—நாம்
பன்னும் தொடர்ச்சிமலை இரண்டு—மற்ற
பக்கங்களில் அமைந்த துண்டு.

பாரத நன்னாடு
பழமைபெற்ற நாடு—தினம்
சாரத் தமிழிலதைப் பாடு!

* குமரி-கன்யாகுமரி.

முன்னை வணங்கும் உமை போன்றாள்—அவள்
முப்பது கோடி மைந்தர் ஈன்றாள்
அன்னை வாழ்கஎன வாழ்த்தி—மற்றும்
அவளுக் குறும் பகையைத் தாழ்த்தி,

ஆர்வத்தினில் ஏறு
தாரணிக்குள் வீறு—கொண்ட
பாரதபுத்ர னென்று கூறு.

ஆய புகழ் மிகுந்த தேயப்—இந்நாள்
அடிமை அடைந்த தென்னமாயம்!—உனைத்
தாயதோ அழைக்கின் றாளே—தன்
தளையை நீக்கச்சொன் னாளே

தமிழன் எலி அன்று
தாவும் புலி என்று—நீ
தாரணி அறியச்செய் இன்று.

*வாய்மை படைத்துப் பொய்ம்மை விடும்பாய்—நீ
வல்லாளன் என்று பெயர் எடுப்பாய்—மிகத்
தூய்மை உடையஉன்றன் தாய்க்கு—நீ
தொன்மை நிலையை உண்டாக்கு.

சுடர் அடிக்கும் அங்கம்
உடன் பிறந்த சிங்கங்—களைத்
தொண்டு செய வரச்சொல் எங்கும்

*வாய்மை-சத்தியம்.

அடிமை நீங்க இந்த நரியும்—மண்ணில்
ஆர்க்கும் உயர்வென்பது தெரியும்
அடிமையாகும் அந்த காரம்—அதை
அகற்றினால் தெரியும் வீரம்

ஆண்மையினில் ஒழுகு
வேண்டுந்தொழில் பழகு—நின்
*மாண்புடைய குலத்துக் கழகு.

*மாண்பு-பெருமை.

உடைமை சிறந்த இந்துஸ் தானம்—தன்
உரிமை பறிகொடுத்த தீனம்—உன்
கடமை தனைநினைந்து பாராய்—குறி
கண்ணிற் றெரிகின்றது நேராய்!

காளையுளம் செல்க!
கதிபுவிக்கு நல்க!—உன் ரன்
தோளையுயர்த்தி நாடி வெல்க!

*இந்துஸ்தானம்-பாரததேசம்.

## தேசீய விடுகவிகள்

கங்கைநதி தலையில் உண்டு சிவனார் அல்ல.
காலடியிற் குமரி யுண்டு ராமன் அல்ல.
சங்கை யற்ற வயதுண்டு கிழவி அல்ல,
சாத்திரத் தின் ஊற்றனையால் கலைமா தல்ல.
எங்குலத்தைப் பெற்றதுண்டு பிரமன் அல்ல.
ஏற்றுண்ணும் எண்ணமில்லை இறுமாப் பல்ல.
வங்கை என்று பாடிடுவர் புலவ ரெல்லாம்.
மற்றி தனை இன்னதென வழுத்து வீரே. (1)

"பாவம் ஒன்றினுக்கே அஞ்சும் பழக்கம்
ரண சூரருக்கும் சலியாத ஆண்மை
தலமே தனக்குத் துணையென்ற எண்ணம்
வானொத்த வாழ்வு வாய்ந்திட்ட கீர்த்தி
சிவனார் தமக்கே பிரியாத தொண்டு"
சொல்லும் இவ் வைந்தின் தொடக்கம் தன்னைக்
கூட்டிப் பார்த்துக் கூறினால்
நாட்டை விட்டவன் நற்பெயர் தோன்றுமே (2)

அதிக உயரத்தில் ஆகாய வாணி
அவனூர்க்கும் நம்மூர்க்கும் வைத்ததோர் ஏணி
மதிப்புக் கடங்குமோ அவ்வேணி உயரம்
மனிதர்சிலர் ஏறப்பார்த் தடைந்தனர் துயரம்
குதித்துக் குதித்திறங் கிடுவர்சில பெண்கள்
குளிரில் இறங்குகையில் பாடிடுவர் பண்கள்
இதற்கு விடைசொல்லக் கூடுமோ உன்னால்
ஏற்ற பரிசளிக்க லாகும் இது சொன்னால்
(3)

ஏழ்மையைப் போக்கிவிடும் இலக்ஷ்மி அல்ல.
எதிரிற் சுழலும் அது சூரியன் அல்ல.
தாழ்மையைப் போக்கிவிடும் சற்குரு அல்ல.
தாய்மானம் காக்கும் அது கண்ணனும் அல்ல:
தோழியாய்க் கொண்டதுண்டு காந்தியடிகள்.
தொழும்பை அகற்றும் என்பர் காந்தியடிகள்
ஆழ்ந்து நிலைந்துபார் பாரதமைந்தா!
அதன்பிற கின்னதென்று கூறிவிடுவாய். (4)

ஒன்று சேர்ந்த "தரை" ஆக்க
ஒன்று சேர்ந்த "வலை" கொண்டார்
ஒன்று சேர்ந்த 'படம்" அற்றார்
உடனே தமது கண் முன்னே
இன்று பாரதம் விடுபட்டால்
இரண்டு சேர்ந்த ',வகை" கொள்வார்
என்றேன் இதனை விவரித்தால்
எட்டுச் சேர்ந்த "வலை" அளிப்பேன். (5)

ஆமை, அருமை, பெருமை, சிறுமை,
அடிமை, கடுமை, மடமையே
ஊமை; உண்மை, இன்மை, இளமை,
உரிமை. திறமை, இவைகளில்
தீமைசெய்து பாரதத்தைச்
சீரழிப்பதெது சொல்வாய்?
நாமடைய வேண்டு வதையும்
நன்கு பார்த்துக் கூறுவாய், (6)

ஈக்கள், எறும்புகள், எலிகள், பூனைகள்
எருதுகள், குதிரைகள்,
பூக்கள், மரங்கள், செடிகள், கொடிகள்
புளிகள். மிளகாய்கள்,
ஊக்கம் கெடவைத் துங்கள் பணத்தை
ஒழித்துப் பாரதத்தை
ஏக்கம் கொள்ள அறிவை மயக்குவ
திவற்றில் எது சொல்வாய்?

குறிப்பு: இவைகளின் விடை, 83-ஆம் பக்கத்தில் காண்க.

## சிட்டுக்குருவிப் பாட்டு

சிட்டுக்குருவிச் சிறுபெண்ணே,
சித்தம் போலச் செய்பவளே.
கொட்டிக் கிடக்கும் தானியமும்
கொல்லைப் புழுவும் தின்பவளே,
எட்டிப் பறத்தால் மண்முழுதும்
ஏறிப் பறந்தால் வானமெல்லாம்
இஷ்டப்படி நீ செய்கையிலே
ஏன்? என்பாரைச் "சீ" என்பாய்.
உன்னைக் கேட்பேன் ஒருசேதி,
*உரிமைத் தெய்வத்தின் மகளே,
தின்னத் தீனி தந்திடுவேன்.
தெரிவிக்காமல் ஓடாதே;
மன்னன் அடிமைப்பிணி யில்லான்.
வாய்மைச் சிறகால் உலகேழும்,
மன்னும் காந்திப் பெருமானார்
மகிழும் தோழி நீ தானா?

*உரிமைத்தெய்வம்-சுதந்தரதேவி

## நிலாப்பாட்டு

நிலவே நிலவே எங்கெங்குப் போனாய்?
உலக முற்றும் உலாவப் போனேன்.
உலாவல் எதற்கு விலாசத் தீபமே?
காடும், மலையும் மனிதரும் காண
காண்ப தெதற்குக் களிக்கும் பூவே?
சூரிய வெப்பம் நீங்கிக் குளிர,
குளிர்ச்சி எதற்கு வெளிச்சப்பொருளே?
செய்யுந் தொழிலிற் சித்தங் களிக்க.
சித்தங்களிக்கச் செய்வ தெதற்கு?
நித்தமும் நாட்டை நிலையில் உயர்த்த.
நாட்டை உயர்த்தும் நாட்டம் எதற்கு?
வீட்டைச் சுரண்டும் அடிமை விலக்க.
அடிமை விலக்கும் அதுதான் எதற்கு?
கொடுமை தவிர்த்துக் குலத்தைக் காக்க.
குலத்தைக் காக்கும் குறிதான் எதற்கு?
நிலத்துச் சண்டையைச் சாந்தியில் நிறுத்த.
சாந்தி ஆக்கும் அதுதான் எதற்கோ?
ஏய்ந்திடும் உயிரெலாந் தேவராய் இருக்க,
பதந்தனில் அமர வாழ்வுதான் எதற்கு?
சுதந்தர முடிவில் சுகநிலை காணவே.

## சுதந்திரம் உயிரின் இயற்கை

### நாய்ப் பாட்டு

மெத்தை வீட்டு வெள்ளை
வீட்டு வாசற் படியிற்
கத்திக் கொண்டே சற்று
கறுப்பு நாயை வா
கத்திக் கத்திக்
"கறுப்புத் தெருநாய்
"மெத்தை வீட்டில் வசிக்கின்றாய்"
"வேளைக் கென்ன புசிக்கின்றாய்"
என்று கறுப்பு, வெள்ளையுடன்
இளித்துக் கொண்டே சொன்னவுடன்,
"ஒன்றும் இங்கே குறை இல்லை"
"உரைப்பேன் கேட்பாய் என் சொல்லை"
"அன்றன்றைக்கும் பாற் சாதம்"
"அப்பம் ரொட்டி *நவநீதம்"
"பன்றியைப் போல் வீங்குகின்றேன்"
"பட்டுமெத்தையில் தூங்குகின்றேன்'
"இருப்பாய் நீயும் என்னோடே
என்றது வெள்ளை அன்போடே"

நாய்,
போய்க்
நின்று
என்று
கூவிற்று.
போயிற்று"

*நவநீதம்-வெண்ணெய்

காதால் கேட்ட கறுப்புதான்
"கழுத்தில் வடுவாய் இருப்பதேன்?
ஏதோ சொல்வாய்" என்றதே
இளித்துக் கொண்டே நின்றதே.
"ஏதாகிலும் செய்யாமல்"
"எனது கழுத்து நையாமல்"
"காதோரத்தில் வார் கொண்டு"
"கட்டிவைக்கும் வடிவுண்டு"
அதனைக் கேட்ட கறுப்புதான்
"அடிமையாய்நீ இருப்ப தேன்!"
"கதிதான் கெடநீ நடப்பதா?"
"கட்டுப் பட்டுக் கிடப்பதா?"
"சதிராய் உன்னிடம் அண்டேனே!"
"சதையில் ரத்தம் கண்டேனே!"
இதனால் அஞ்சி ஓடுதுபார்!
இன்னும் ஓடுது ஓடுதுபார்.

## தேசிய விளையாட்டு

### தாடு பிடிக்கும விளையாட்டு

(விசாலமான நான்குமூலைக் கோடுகிழிக்கவேண்டும் ஒவ்வொரு மூலையிலும் ஒவ்வொருவர் நிற்கவேண்டும்; அப்படி நிற்பவர்கள் பாரதநாட்டார். ஒருவன் நடுவில் நிற்பான், அவன்தான் அயலானாகிய கோட்டான்.)

கோட்டான் - நாட்டாரே நாட்டாரே நாட்டில்
என்ன செய்கின்றீர்.
நாட்டார் - கோட்டானே! கோட்டானே?
கோட்டில் நின்றோம் கோட்டானே.
கோட்டான் - கோட்டிற்கொஞ்சம் தூங்குங்கள்
குலதர்மத்தில் நீங்குங்கள்
நாட்டார் - பாட்டன் காலம் பழுத்தது
பாரதநாடு விழித்தது.

(நாட்டார்கள் ஜாக்கிரதையாய்த் தமது கோட்டி லிருந்து மாறவேண்டும் கோட்டானுக்கு மூலையைப் பற்றி கொடுத்துவிடக் கூடாது. பறிகொடுத்தவன் கோட்டானாக நிற்கவேண்டும். அடுத்த ஆட்டம் தொடங்கும்போதும் பாட்டைச் சொல்லவேண்டும்.)

## நியாயசபை விளையாட்டு

(சீமானுக்கும் வைத்தியருக்கும் சம்பாஷணை; வைத்திய ரைக் கேலிசெய்து தாம் கொழுத்திருப்பதற்கு மருந்து கேட்கிறார் சீமான்).

சீமான் - கைப்பார்ப்பரே வைத்தியரே?
கால் பார்ப்பீரோ வைத்தியரே?
வைத்தியர் - கைபார்க்கின்றோம் சீமானே!
கதியைச் சொல்வோம் சீமானே!
சீமான் - மெய்யாய் உடம்பு கொழுக்குதே?
மேனிசரிந்து பழுக்குதே?
வைத்தியர் - நையப் பலரை இழுப்பீரே!
நாட்டுக் கவருடன் உழைப்பீரே!

(இந்தக் குற்றத்திற்காகச் சேவகன் வைத்தியரை இழுத்துக் கொண்டுபோய் நியாயாதிபதியிடம் நிறுத்துகிறான்)

நியாயாதிபதி - நாட்டுக்குழைக்க முன்நீரே,
நால்வர் அறியச் சொன்னீரே?
வைத்தியர் - பாட்டுப் பாடி எங்கும் நான்,
பறைகொட்டாதது குற்றந்தான்.
நியாயாதிபதி - போட்டேன் உம்மை ஓர் வருடம்
போவீர்சிறைக்குத் திரும் அடம்
வைத்தியர் - பாட்டும் பறையும் முழக்கினீர்
பாரதமக்களை எழுப்பினீர்

(சேவகன் வைத்தியரைச் சிறைக்கிழுத்துக் கொண்டு போகுதல்).

## ஓடிப்பிடிக்கும் புறா விளையாட்டு

(சிறுவர்கள் சமமாகப் பிரித்து பாதிப்பேர் ஒரு பொது மனிதர்வசம் நிற்க வேண்டும்; அவர்கள் வீட்டுப் புறாக்கள். மற்றவர்கள் காட்டுப் புறாக்கள்.)

வீ. - கூட்டம் போட்டீர் காட்டுப் புறாக்களே?
கா. - குலமொத்திருந்தோம் வீட்டுப் புறாக்களே!
வீ. - ஊட்டங்கிடைக்குதோ காட்டுப் புறாக்களே?
கா. - ஓடிப்பொறுக்குவோம் வீட்டுப் புறாக்களே!
வீ. - ஓட்டம் எமக்கில்லை காட்டுப் புறாக்களே?
கா. - உரிமை தொலைந்ததோ வீட்டுப்புறாக்களே!
வீ. - வாட்டமாய் வாருங்கள் காட்டுப்புறாக்களே?
கா. - வந்தாற் பிடிக்கலாம் வீட்டுப் புறாக்களே.

(காட்டுக் புறாக்களை வீட்டுப் புறாக்கள் பிடிக்க ஓடுகின்றன. பொது மனிதரைத் தொட்டு விட்டால் காட்டுப் புறாக்களுக்கு ஜயம். ஒரு காட்டுப் புறா அகப்பட்டுவிட்டாலும் எல்லாம் அகப்பட்ட மாதிரிதான். பிறகு ஜயித்தவர் காட்டுப் புறாவாக ஆட்டந் தொடங்கும்.)

## தேசீய உபாத்தியாயர்

பிள்ளைகளே கேளீர் உமக்கோர் பெருஞ்சேதி!
வெள்ளைக்காரத் துரைகள் வெள்ளையரின் நாட்டினின்று
பாரதத்தில் ஏன்வந்தார்? என்றால் பலபொருளைப்
பாரதத்தில் விற்கவந்தார். இவ்விடத்தில் பாரதத்தார்
ஒத்து மறுத்துவிட்டால் தொல்லை ஒழிந்துவிடும்
பத்துநாள் போதும்இந்தப் பாரதத்தை நன்றாக்க.
''ஆங்கிலரின் சாமான்கள் அத்தனையும் நீக்குங்கள்
வாங்காதீர்'' என்று *மகாமன்றும் சொன்னதுண்டு.
உங்கள் தகப்பன்மார் இதனை உணராமல்
மங்க உரைத்தால் மறுத்துரைப்பீர் மாணவரே.
நானுரைக்கச் சொல்லுதை நன்றா யுரைத்திடுங்கள்
ஏனப்பா நீங்கள் இறந்தபின் உங்களைப்போல்
வெள்கி ''அடிமைசெய வேண்டுமா?'' உங்களைப்போல்
பிள்ளைகளும் பின்னாளிற் சாகப் பிரியமுண்டோ?
சொத்தெமக்கு வைப்பதாய்ச் சொல்லுவது சொத்தன்று
சொத்தெமக்கு நல்ல சுதந்தரந்தான என்றுரைப்பீர்.
பிள்ளைகளே வீரர்க்குப் போர்களே ''உம் உரிமை''
நொள்ளைகள்போல் விட்டுவிட்டு நோயால் வருந்துவது
தந்தைமார் செய்கின்ற தப்பன்றோ? ஆதலால்
வெந்துயரைத் தீருங்கள் வெற்றிபெறப் பாரதத்தை
மீட்டுக் கொடுங்கள் எனத்தினமும் தந்தையரைக்
கேட்டுக் கொள்ளுங்கள் இனி.

*மகாமன்று-காங்கிரஸ்.

## தேசீய தாலாட்டுக்கள்

### ஆண் குழந்தையைத் தாலாட்டல்.

சர்வசாதாரணமாகப் பெண்டிர் தாலாட்டுப்பாடும் மெட்டு.)

ஆராரோ - ஆரரிரோ
வீரமகனே
கோரும் உரிமை
நீலவிழிகள்!
கோலும் உதடு
வேளைக்கு வேளை
நாளைய வெற்றி
அமுதமுனக்குப்
சமர்விளைக்க வந்த
இன்பம் உனக்குப்
அன்று முடிபூண்ட
பொய்மை உனக்குப்
வெம்மைப் பகையுனது
நல்ல இமயமலை

ஆராரோ ஆரரிரோ
வேலவனே, விண்ணவர்கள்
கொடுக்கவரும் ஆணழகே!
நிலவுமுகம்! தாமரை வாய்!
கொட்டுதமிழின் அரும்பு!
விறல்வளரும் பாரதனே,
இன்றலரும் நாட்டானே!
பாரதத்தாய் அன்பெல்லாம்
தமிழா இளங்குமரா,
பாரதப்போர் ஏற்பதிலே,
ஆரியனே வேல் *மறவா
பொன்விழுங்கும் பூதங்கள்!
வேலுக் கிலக்கியமாம்.
நாடிவரும் கங்கைநதி;

*மறவன் - வீரன்

வெல்லத் தமிழ்பிறந்த
வைகை, யமுனை,

பொய்கை, மலர்ச்சோலை
வில்மறவர், வேல்மறவர்,
பன்னு தமிழ்நாட்டுப்
செல்வம் பறிபோதல்
"வெல்வம்" என்று நீதான்
வீரியத்தைக் காட்டும்
ஆரியர்கள் நாட்டின்
*வெற்பு - மாலை

மேன்மைப் பொதியமலை,
வளங்கொழிக்கும் பெண்ணை
நதி,

பூணுகின்ற பாரதனே,
*வெற்பொத்ததோள் மறவர்,
பலவீரர் பார்த்திருக்கச்
எண்ணிச் சிரித்தாயே!
விழிதுயில்வாய் பாரதனே
புலிபோல் விழிதுயில்வாய்
அனலே விழி துயில்வாய்.

## பெண் குழந்தையைத் தாலாட்டுதல்

திராத ஆசையெல்லாம்
வாராத செல்வமெல்லாம்
தாமரையின் வாய்திறந்தால்
சாமத்திலும் பிரியாத்
ஒத்திருக்கும் உன்சமுகம்
மொய்த்திருக்கும் உன்சமுகம்
ஏதோ உனதுகுறை
போதேநீ கண்ணுறங்கு
அங்கம் பதைத்தே
வங்கத்து வீரருன்றன்
தேசத் துருக்கரெலாம்
மீசைத் தெலுங்கர்களும்
அமிழ்தக் கவிகள்
தமிழ்நாட்டு வீரரெலாம்
நாட்டுக்கு நூலிழைக்கும்
வீட்டில் துணிநெய்யும்
கன்னியா குமரிமுதல்
உன்னிரத்தம் சேர்ந்த
ஆசைதவிர்த்ததுண்டோ
நேசம் குறைந்ததுண்டோ
கூட்டத்தில் வாழும் மயில்
நாட்டின் குலவிளக்கே
தேச முனக்குத்
யாசகமாய் வந்தவரைப்
சந்தனக் காடு
சிந்துநதி கங்கைநதி
யாவும் உனக்கே
தாவும் பொடிவாசச்
பாடப் பழங்கவிகள்
தேடிப்பிடிப்ப தில்லை
நாலு மறைகள்,

தீர்க்கவந்த பெண்ணரசி!
வந்துதரும் தெய்வீகமே!
சாதிசனம் வாய்திறக்கும்
தாய்நாடு வாய்திறக்கும்
ஊமையரென் றெண்ணாதே-
முப்பத்து முக்கோடி-!
ஏந்திவரும் கட்டழகே!
பொன்னான தொட்டிலிலே.
அசத்தியத்தைக் கொன்றிடுவார்
வாழ்க்கையிலே சம்பந்தி,
தேவியுன்றன் அண்ணன்மார்,
வில்லர்களும் மைத்துனர்கள்
அம்புலிக்குச் சொல்லிவைத்த
சண்பகமே, சொந்தத்தார்.
நங்கையருன் அக்கையர்கள்,
வீரருன்றன் அம்மான்கள்,
கங்கைஇமயம் வரைக்கும்
உடம்புடையார் பாரத்தார்
ஆரியத்துப் பெண்ணுனக்கு
நீதரெலாம் வாழ்நாட்டில்.
கோலம் குறைந்ததுண்டே?
நாயகமே கண்ணுறங்கு.
திரவியங்கள் உன்னுடைமை
"போ" என்றால் ஏனிருப்பார்?
தவமலைகள் உன்னுடைமை.
தித்திக்கும் பாற்குளங்கள்
இளைய பெருமாட்டி!
சோலைகளும் உன்னுடைமை.
பல்கோடி உன்னருகே
சிந்தைமகிழ் காவியங்கள்.
நவில் ஆறு, சாத்திரங்கள்

மூல தருமம்,
உடைமை சிறந்ததுண்டாம்
படையிற் சிறந்தவராம்
கோயில், மணிவீடு,
வாயிலிலே பொன்சிந்தும்
நெல்லும் மணிவகையும்
வெல்லக் கரும்பும்
எத்தாற் குறைச்சல்
தித்திக்கும் கற்கண்டே

முடிவில்லாக் கைத்தொழில்கள்
உன்னுடைய பாரதத்தில்
பாரதத்தாய் பெற்றமக்கள்
கொட்டடிகள், சத்திரங்கள்,
மாளிகைகள் கோடியுண்டு.
நின்நாட்டில் வேண்டுமட்டும்.
விளைவதுண்டாம் உன்நாட்டில்
எவ்விதத்தால் தாழ்வுனக்கு?
தேசமுத்தே கண்வளராய்.

## பாரதத்தாய் மாணவர்க்குக் கூறுவது:

கண்ணிகள்

என்னாருயிராக யான்பெற்றேன் உம்மையெல்லாம்
அன்னையென் றென்னை அறியீரோ மாணவரே?

அடிமையுற்ற அன்னை அரசுபெற உங்களது
கடமைஇன்ன தென்றுதான் கருதினிரோ மாணவரே?
அன்னைக்குப் புத்துயிரும் ஆக்கமும் கீர்த்தியும் நீர்
*இன்னே தரநினைத்தால் யார் தடுப்பார் மாணவரே?
புத்தறிவும் தெய்வப் பொதுநோக்கும் வாடாது
மொய்த்த இளம்பருவம் முனைகருகிப் போகாதீர்,
மாசற்ற நெஞ்சும் மகிழும் இளமாண்பும்
தேசத்துக் கன்றிச் சிதடருக்கோ மாணவரே?
விழிக்குங்கால் உங்கள் வெறுந்தேசம் கண்டீரே;
பழக்கிவரும் கல்வியிலே பாரதத்துக் காவதுண்டோ?
சாங்கால மட்டும் சலித்துப் புடைத்தாலும்
ஆங்கிலத்தில் உம்நிலைமை அறிவதுண்டோ மாணவரே?
வெள்ளைநிறம் என்செல்வம் வேட்டையிட நீங்களதை
அள்ளிச் செப்பம் செயவோ அக்கலையைக் கற்றீர்கள்!
அயலார் வெறும்பாஷை அறிவதால் உங்கள் சாண்
வயிறுநிறையும் என்ற வார்த்தையில்தான் உண்மை உண்டா?
தட்டிக் கொடுத்துப்பின் தம்பாஷைக் குட்படுத்திப்
பட்டப் பரிசுதரும் பான்மையிலே ஏதுகண்டீர்?
முப்பதுகோடிப் பெயர்கள் முழுவதும் பிறர்பாடம்
ஒப்பித்தாலன்றி உணவின்றிச் சாவீரோ?
செந்தமிழாற் கம்பன் சிறந்தானா நேற்றிங்கு
வந்தவரின் ஆங்கிலத்தால் வயிறு வளர்த்தானா?
கழற்று மணிமுடிநான் காணப் பிறர்பாஷை
சுழற்றி எறிந்து சொந்தத் தேசத்தை வாழ்க என்பீர்.

* இன்னே—இப்போதே

## விடுதலைக்குச் செல்லும் கப்பல்

ஏலப்பாட்டு மெட்டு

பொன்னைப் பெருக்கும் சுரங்கத்தை ஒக்கும்
போகத்திலே அந்த வானை நிகர்க்கும்!

மன்னிச் சிறக்கின்ற புகழ்கொண்ட நாடு,
வளமைக்கும் அழகுக்கும் இணையற்ற நாடு
பன்னக் கிடக்கின்ற சம்பத்து வாய்ந்த
பாரதத் திருநாடு பழமைபெற நாடாம்.
என்னைப் பிறப்பித்த எழில்நாடு தன்னை,
யாத்திரைக் கப்பலாய்ச் செய்யவந் தேனே.
சீரான இமயமலை வடகோடி முதலாய்த்
தெற்குமுனை கன்னியா குமரிவரை நீளம்!
நேரான தொடர்மலைகள் இருபக்கம் உண்டு;
நெடிதாய் இருக்குதே எங்களது கப்பல்.
பாராய் கொடிக்கம்பம் இம்மலைச் சிகரம்!
பார்வைக்கும் எட்டாத அக்கம்ப மீது,
வார்கொண்ட மேகக் கொடிச்சீலை கட்டி,
வானிற் பறக்கக் கிளம்புதே கப்பல்!

''உறுதி'' என்னும்பாயை விரியடாமேலே
''உணர்'' வென்ற சுக்காணை நேரேபிடிப்பாய்.
முறையாய் நடக்கையில் ''பேதமாம்'' காற்று
மோதாத விதமாகப் பாரதத் தாரை
நிறையாக ஏற்றடா ஒற்றுமை ஆக்கி
நேராக ஓட்டடா பாரதக் கப்பல்!
இறைவிமா சத்தியே துணைநிற்க வேண்டும்
எதிரே சுதந்தரப் பொன்னாடு காண.

''அடிமை'' என் னுங்கடல் நெளியுதே பாராய்!
அதுகிழிய ஓடுதே பாரதக் கப்பல்!
கொடிதான வறுமையாம் கூட்டச் சுறாக்கள்
கொட்டம் குறைந்தது கப்பல் வேகத்தில்.
தடையொன்று தோன்றுதே இதுவென்ன பாராய்!
தன்வாய் திறக்குதே கடல்மீ திருந்தே.
திடமுண்டு நெஞ்சிலே உமிழடா காறிச்
சிறையாம் திமிங்கலம் நமையென்ன செய்யும்?

மலையொன்று தோன்றுதே கடலுக்கு நடுவே!
வழியை மறிக்குதே ''அயலார்சரக்கு''
''விலைகொண்டு பிறர்பொருள் வாங்கிடோம்'' என்ற
மேலான மந்திரம் வாய்கொண்ட மட்டும்
நிலையாக ஓதடா ஓதடா ஓது!
நீசத்தடங்கலை மோதடா மோது?
தொலையாத கடலைத் தொலைக்குதே கப்பல்!
சுதந்தரப் பொன்னாட்டை எட்டுதே கப்பல்!
''தீண்டாமை'' என்கின்ற பாவப் பிசாசு
திரளாக வந்தன யாமென்ன செய்வோம்?
மாண்டாலும் மேலடா! கருநிறப் பேய்கள்
வாயைத் திறந்தால் நடுங்குதே உள்ளம்!
வேண்டாம் எனும்போதும் ஐந்தாறுகோடி
விழுங்கப் பறந்தன நாமின்று தீர்ந்தோம்,
தீண்டாமை நீக்கினோம் தீண்டுவோம் என்று

செப்புவீர்; செப்பப் பறக்குமே பேய்கள்.
கடல்கிழிய ஓடுதே எங்களது கப்பல்!

காதவழி போகின்றதேயோர் நொடிக்குள்!
விடுதலைப் பொன்னகரம் உயிருக்கும் இனிது!
விழிகொண்ட ஆசையோ கடலினும் பெரிது!
கெடுதலைகொள் அடிமையோ நரகினுந்தீது!
கீழான அடிமையைப் புழுவும் ஒப்பாது!
விடுதலைகொள் விடுதலைகொள் என்றதே உள்ளம்
விழியென்று காணும் அவ் வாநந்தவெள்ளம்?

விண்ணின்று சூரியன் வீழ்ந்ததே மேற்கில்!
விழுங்குதே எருமைக் கடாப்போல் இருட்டு!
கண்ணற்ற இருளிலே வழிதோன்ற வில்லை
கப்பலும் ஓடுதே நொள்ளைகளை நம்பி.
எண்ணமும் தேகமும் கப்பலின் மேலே
எங்கும் விழாததே இருள்செய்த நன்மை
பண்ணான தமிழற்ற தமிழ்மக்கள் போலே
பார்வை இல்லைநமக் கிருவிழிகள் உண்டு.

ஒளியொன்று தோன்றுதே! வாழ்த்தடா தாயை!
ஒளிதான் துரத்துதே இருளென்ற பேயைச்
களியுண்டு நெஞ்சிலே இனியேது தொல்லை?
கடல்மீது பாயுதே கிரணங்கள் மெல்ல.
வெளிவந்த சூரிய வாணவே டிக்கை!
விடுகிறான் புவியெலாம் கிரணங்கள் தூவி!
துளிஇல்லை சந்தேகம் இனியேது தாபம?
சுதந்தரப் பொன்னாடு மிகவும்ச மீபம்;
தீவொன்று தோன்றுதே கொஞ்ச தூரத்தில்
சீக்கிரம் போவோம் செலுத்தடா கப்பல்
காவலர் மாளிகை, கொடி, அதோ பாராய்!
கப்பல் நிறுத்தினோம் வந்திறங் கிட்டோம்.
''வா, வா'', எனச் சொல்லி நமையழைக் கின்றார்.
வயித்தியச் சோதனை பார்க்கிறோம் என்றார்.
நோவில்லை ஆனால் அனுப்புவோம் என்றார்.
நுண்மையாய்ச் சோதனை பார்த்தபடி நின்றார்.

நாக்கிலே பிறர்கல்வி தீர்ந்ததா? என்றார்.
நாசிதான் பிறர்வாசம் நத்துமோ? என்றார்.
நோக்கிலே சமநோக்கு வந்ததா? என்றார்.
நுண்செவியில் அயல்சூழ்ச்சி நுழையுமோ? என்றார்.
தாக்கும் புயத்திலே சக்தியெங் கென்றார்.
தடக்கைகள் தன்கோல் சுமக்குமோ? என்றார்.
போர்க்குத் திரும்பாத மார்பு காட்டென்றார்;
பொங்கும் சுடர்முகம் காட்டென்று கேட்டார்.

இடையினிற் சொந்தநூ லாடைஎங் கென்றார்.
இட்டவயி றயலுணவு தொட்டதோ என்றார்.

உடம்பிலே தன்னொழுக் கம்காட்டு கென்றார்.
உயிரிலே தன்னுரிமை ஒளிகாட்டு கென்றார்.
தொடுகின்ற இடமெலாம் பரதர்மம் இன்றிச்,
சுதர்மமே உள்ளத்தில் உள்ளதா என்றார்.
அடைவுடன் சோதித்த இவரெலாம் யாவர்?
அட்டா சுதந்தரப் பொன்னகர்த் தேவர்.

தாய்நாடு விடுதலைப் பொன்னாடு போகத்
தருமென்ற உத்தரவு விரைவாய்க் கொடுப்பார்.
தாய்நாடு வாழ்கஎன் றேசொல்லி வாழ்த்து!
தடையான அடிமையை வேல்கொண்டு வீழ்த்து!
தாய்நாடு வெல்கஎன் றேஎழுந் தாடு
தமிழான மதுவுண்டு களிகொண்டு பாடு.
தாய்நாடு மேலென்று வானிற் செருக்கு!
தமிழென்ற முரசத்தை மண்ணில் முழக்கு!

## கலியின் கொடுமை

(கலி பாரத தேவியிடம் சொல்லுகிறான்
"ஞாயந்தானோ நீர் சொல்லும்" என்ற மெட்டு)

பல்லவி

பாரடீ கலியின் ஆட்சி!—ஏ

அநுபல்லவி

பாரத தேவியின் மைந்தரைக் கெடுத்தேன் (பா)

சரணங்கள்

மேற்குத் திசையின்சா ராயம் - உன்
வீர மைந்தர்க்கதில் நேயம் - உனைச்
சோற்றுக் கழலைக்குமு பாயம் - நீ
சுதந்தரம் கேட்பதென்ன ஞாயம் - அடி (பா)
வெறித்துக் குடிக்கிறான் கள்ளை - அடி
விழுந்து முறிக்கிறான் முள்ளை - வழி
அறிந்து நடக்கக் கண் தொள்ளை - உனக்
கரசு தருமோ இப் பிள்ளை - அடி (பா)
ஆடை அழுக்குடைய கந்தை - இந்த
அழகில் அனைவரையும் நிந்தை - சொல்லிப்
பாடை தனிலுங்கள் மொந்தை - எண்ணிப்
பறந்தான் மற்றொருகு ழந்தை - அடி (பா)
ஆசாரம் கெடுமென அஞ்சா - மைந்தர்க்
கமுதமும் சாகமும் நஞ்சா? - உயிர்
நாசம் புரிந்தே கஞ்சா - கொடி
நாட்ட உனக்கிரும்பு நெஞ்சா? - அடி (பா)

வீட்டுக்காசிலே
வீதி எங்கும்புகை
நீட்டிப் பிடித்தனர்
நீசத்தனம் வளர்க்கும்
நாவற் பழஉதடு
நாற இருகன்னமும்
சாவுக்கே பிடிப்பர்
தறுதலை பாரத
மூளை வறண்டுபோம்
முழுதும் சளியொழுகும்
தாளை ஒழிக்குமிந்தப்
அழிந்திடுமே அரை
தேயிலை காப்பியைப்
தித்திக்குதென்று தினம்
கோயிலில் வைத்துத்துதி
கொள்கையை வேரோடு
சுதந்தரத் துவக்கமே
சுதர்மத்தை வீழ்த்துதல்
*சுதன் அறியானிந்த
தொல்லை செய்தல் கலி
*சுதன்-பிள்ளை

திருட்டு - நல்ல
யிருட்டு - மிக
சுருட்டு - நாட்டில்
பொருட்டு - அடி (பா)
கூடி - எங்கும்
வாடி - பின்பும்
பீடி - இந்தத்
ஜோடி? - அடி (பா)
படியே - முசும்
நெடியே - தந்
பொடியே - உனை
நொடியே - அடி (பா)
பிடித்தார் - அவை
குடித்தார் - பின்பு
படித்தார் - தேசக்
மடித்தார் - அடி (பா)
சுதர்மம் - அந்தச்
அதர்மம் - உன்
மர்மம் - உனைத்
வர்மம் - அடி (பா)

## தேசீய நலங்கு

### (மகள் நலங்கு)

("மாதாட பாரதேனோ" என்ற பாட்டு)

#### பல்லவி

சுப நலங் கியற்றுவீரே தோகையர் நீரே (சு)

#### அநுபல்லவி

தூய நாட்டின் தொண்டுக்குத்
தோன்றிய சுற்கண்டுக்குச் (சு)

#### சரணம்

அபசார மின்றித் தாய்நாட்டத்தர். கலவை பூசி
உபகாகிக் குநல்லாசி உரைப்பீர்கள் மலர் வீசிச் (சு)

நொந்தேமா! பண்டைவாழ்வில் நுழையோமா! என்று நாவில்
வந்தேமா தரம் பாடும் மணிக்குக் கதம்பம் தூவிச் (சு)

சருமம் சுமந்த வீரர் கட்டடி மையைச் சாடக்
தருமம் சுமந்த தோளில் தையல்நல் வாரம்சூடச் (சு)

வாதை பெறும் நாட்டுக்கு மாவீர மக்கள் மற்றிக்
கோதைபெறுவாள் என்று குழவியெடுத்துச் சுற்றிச் (சு)

கோலிழைக்கும் குற்றத்தால் கொள்ளைபடும் நாட்டுக்கு
நூலிழைக்கும் நோன்பு நோற்கும் சீ மாட்டிக்குச் (சு)

பதரான மேல்நாட்டார் பழிவாங்கும் ஆடை நீக்கிக்
கதராடை பூண்ட எங்கள் கண்மணிக் காலம் தூக்கிச் (சு)

மதிநாறிப் பாரதத்து மண்ணை மதித்தோர் கள்ள
விதிநாறும் படிபேறு பதினாறும் மகள் கொள்ளச் (சு)

தாழ்வென்று தமைமற்றோர் சகத்திற்சொல் வகைவீழ்த்தி
வாழ்வென்ற "சுதந்தரம்" வாய்ந்திட்டதெனவாழ்த்திச்(சு)

(மகன் நலங்கு)

"ஆருக்குப் பொன்னம்பல கிருபை இருக்குதோ அவனே பெரியவனாம்" என்ற மெட்டு

பல்லவி

பாருக்குள் விடுதலைப் போருக்கு வந்த சேய்க்குப்
பரிந்து நலங்கிடுவீர் (பா)

அநுபல்லவி

காருக்கு மகிழ்கின்ற மயிலினமே—மலர்க்
காட்டில் இசைகின்ற குயிலினமே! நீவிர் (பா)

வாள் வைத்த தோளுக்குத்தன் மாதா உரிமை மீட்க
நாள் வைத்திருக்கும் சேய்க்குத்
தூள் பட அடிமையைத் தொலைத்துநீ நாட்டினை
"ஆள்மகனே" என ஆசி சொல்வீரே (பா)

நிசியினும் பகலினும் நெடுநிலம் காத்திடும் வில்
விசயனின் வழித்தோன்றல்
கசிந்திடும் பனிநீர்க் கலசம் கை யேந்திக்
காளை யுளங்குளிரக் கவிழ்ப்பீரே (பா)

ஊமையும் எதிர்த்திடும் வீரச் சிவாஜி என்னும்
வாழையின் கீழ்க்கன்று
ஏழ்கடற் புவிதன்னில் ஈடற்ற பாரத நா
டீன்ற மகனுக்கின்பம் தோன்ற மிகவே என்று (பா)

## தேசீய மங்களம்

("கோருங்கள் கோருங்கள் கோருங்களே" என்ற மெட்டு)

பல்லவி

மங்களம் மங்களம் மங்களமே-சுப
மங்களம் மங்களம் மங்களமே.

அநுபல்லவி

தங்க முறும் நாட்டி னுக்குத்
தொண்டு செய்யும் தம்ப திக்கு (ம)

சரணம்

சிங்கம் சுமந்திடும் ஆசன மேலே
செங்கோல் கொள்ளும் ஆதி மன்னர்கள் போலே
"எங்கள் நிலத்திற் பிறர்க்கென்ன வேலை"

எங்கள் கொள்கை நன்று துள்ள
இல்லறம் செய் நல்லவர்க்கு (ம)

பாரத நாட்டிற் பரதர்மம் நீக்கிப்
பச்சைச் சுதர்மத்தை எங்கணும் ஆக்கிக்
கோரும் சுதந்தர நற்கொடி தூக்கிக்

குண மிக்க வாழ்வு பெறும்
மண மக்க ளாம்இவர்க்கு (ம)

வைதிகர் நல்ல துருக்கர்கள் கூடி
வாழ விரும்புதல் போல் இவர் நாடி
மெய்யும் உயிருமாய் இன்பங்கள கோடி

மேவும்படி மனம் அன்பிற்
றாவும்படி ஆனவர்க்கு (ம)

தேசக் கதர் நெய்யும் சீரிய வழக்கம்
செய்வன யாவினும் வைதிக ஒழுக்கம்
நீசத்த னத்தினி லேமனப் புழுக்கம்

நிறையகொண் டார்கற்பின்
முறையைக்கொண் டோரிவர்க்கு (ம)

பாரத வாசியைக் கீழென மதிக்கும்
பாவி இருக்கக் கண்டா லுளம் கொதிக்கும்
சீரது வாய்ந்த சிறந்த தம் பதிக்கும்

செஞ்சொற்கிளி இனமே! வளம்
மிஞ்சப் புகல்வீர் மங்களம். (ம)

## தேசிய சோபனம்

("கழுத்தில் விழுந்த மாலை கழற்ற முடியவில்லை".
என்ற மெட்டு)

சோபனம் சோபனம் சோபனமே—சுப
சோபனம் சோபனம் சோபனமே (சோ)

பூபனும் அழகிய புனிதையும் ஆகிய
புதுமண மக்களுக்குச் சோபனமே.
ஏ பாவைகாள் உரைப்பரே!—நல்ல
இந்துஸ்தான் விடுதலை சிந்திப்பவர்க்கே சுப (சோ)

கண்ணிமை போலே நாட்டினைக் காத்திடும்
காந்தியடிகள்போல் கஸ்தூரி பாய்போல்
நண்ணிச் சமதர்மத்தினை நடத்திடு வார்க்கு
நாட்டினில் உரிமைப்போர் தொடுத்திடு வார்க்குப்
பண்ணிற் குழைத்த தமிழால்—நன்கு
பாடுகநீர் பாடுகநீர் பாடிடுகவே சுப (சோ)

ராட்டின மங்கையும் நாட்டினர் செங்கையும்
கூட்டிய காதலில் குளித்திடும் பயன்போல்
திட்டிய வாள்போல் செருகிடும் உறைபோல்
திரா இன்பத்தில் ஓருயிர் போலே
பூட்டாத வில் நுனிக்கு நாண்—கொண்டு
பூட்டுகின்ற புத்திரர்கள் பூணு பவர்க்கே சுப (சோ)

வாழ்வி லுயர்ந்த எங்கள் பாரதத் தாய்போல்
வாழ்ந்திடும் படியே இந்தப் புவியின்மேல்
சூழின்பந் தாங்கிச் சுதந்திரம் ஓங்கித்
தொல்லை தரும் அடிமைப் பிணி நீங்கி
வாழ்வார்கள் வாழ்வார்கள்!...என்று
வாய்மலரக் கம்மலரிற் சோபனம் கொட்டீர்
சுப (சோ)

## தேசிய திருமண வாழ்த்து

(''மகாவதி குண மாதரே வேகமாய்'' என்ற மெட்டு)
வாழ்க தம்பதிகள் வாழ்கவே வாழ்கவே!
வன்புனம் கங்கையென நன்றெலாம் சூழ்கவே!
ஆழ்கடல், ரவி, மதி வான் உள்ளகாலம்,
ஆயுள் அடைக! ஓங்க அநுகூலம்
ஆலெனத் தழைந்தும் அறுகென வேரிழிந்தும்
மேலுக்கு மேலின்பம் மிகும் அன்பிற் பிழிந்தும்
வேலைச் சுமக்கும் பிள்ளைமிகும் எழிற்கிள்ளை
காலமெலாம் குடி கனத்தோங்க
அடிமையும், மிடிமையும் ஆண்மையால் மாற்றியே
ஆவியினும் இனிதாய்த் தேசத்தைப் போற்றியே
கடமை நினைந்திரு கையின்மேல் உரிமை
கண்டுயர் வெய்துக இத்தரை மேல்.
வாழ்க தம்பதிகள் வாழ்கநற் சுற்றமே!
வாழ்க நற்பாரத சோதரர் முற்றுமே!
வாழ்க நற்பாரத தேசமும் புவியும்
வாழ்க நற்பரைதாள் மலர் வாழ்க.

## தேசீய விடுகவிகளின் விடை

1-வது பாரத தேவி.

2-வது நாட்டைவிட்டவன் நற்பெயர்; முதல் ஐந்து வரிகளின் தொடக்கம் அதாவது முதலெழுத்துகளைக் கூட்டிப்பார்க்க. பாரதவாசி என்றாகிறது காண்க.

3-வது இமயமலை. வெள்ளைக்காரர்கள் ஏற முயன்று தொல்லையடைந்தது வெளிப்படை. குதித்துக் குதித்து இறங்கிடுவர் சில பெண்கள் என்பது மேலிருந்து இறங்கும் கங்கை, சிந்து முதலிய நதிகள்.

4-வது இராட்டினம்.

5-வது ஒன்று என்பது தமிழ் இலக்கியம் அதாவது க. ஒன்று சேர்ந்த தரை ஆக்க க+தரை=கதரை உற்பத்தி செய்ய. ஒன்று சேர்ந்தவலை கொண்டார்: கவலை கொண்டார். ஒன்று சேர்ந்த படம் அற்றார் கபடம் நீங்கியவர், இன்று பாரதம் விடுபட்டால், இரண்டு அதாவது உ. சேர்ந்த வகைகொள்வார்; உவகை கொள்வார். எட்டுச் சேர்ந்த வலை அளிப்பேன் (எட்டு அ) அவலை அளிப்பேன். எனவே, இதில் பிரஸ்தாபிக்கப்படுபவர் மகாத்மா காந்தி.

6-வது தீமை செய்து பாரதத்தைச் சீரழிப்பது; அடிமை. நாமடைய வேண்டுவது; உரிமை.

7-வது மன உறுதியைக் கெடவைத்துப் பணத்தை அழித்து அழிவையும் மயங்க வைப்பது புளிகள். புளிக்கக் கூடிய கள் என்று இதற்கு அர்த்தம்.

வந்தேமாதரம்

ஃ ஃ ஃ